**நீலகிரி மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் செயல்முறைகள்**
**பிறப்பிப்பவர்:திருமதி.இரா.கீர்த்தி பிரியதர்ஷினி, பி.இ.,**

ந.க.அ3.11598/2021 நாள்: 10.01.2022

பொருள்: கருணை அடிப்படையில் பணிநியமனம் - நீலகிரி மாவட்டம் - காவல்துறையில் பணிபுரிந்து பணியிடையே காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு.ஹெச்.சிவக்குமார் (லேட்) என்பவரின் மனைவியும் வாரிசுதாரரான கல்பனா (திருமதி) ஜெ.எம். என்பவரை இளநிலை வருவாய் ஆய்வாளராக - கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்தது - பணிவரன்முறை செய்து - ஆணை.

படிக்கப் பட்டவை:
1. நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.அ3/9860/2019, நாள்:28.11.2019.
2. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை, நாள்:26.02.2021.

--------------

**ஆணை:**

பார்வை-1இல் படிக்கப்பட்ட செயல்முறைகளின்படி, நீலகிரி மாவட்ட வருவாய் அலகில், கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, குன்னூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் கடந்த 05.12.2019 முற்பகல் பணியில் இணைந்த திருமதி.ஜே.எம்.கல்பனா என்பவருக்கு பார்வை 2-ல் குறிப்பிட்டுள்ள அரசாணையின்படி, கீழ்க்கண்ட பட்டியலில் அவரின் பெயருக்கு எதிரே குறிப்பிட்டுள்ள நாளில் தனியரின் பணியினை பணிவரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

| வ. எண். | பெயர் மற்றும் பதவி | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|
| 01. | திருமதி.ஜே.எம்.கல்பனா,<br>இளநிலை வருவாய் ஆய்வாளர்,<br>வட்டாட்சியர் அலுவலகம்,<br>குன்னூர். | 05.12.2019<br>முற்பகல் |

இது தொடர்பாக, மேற்படி தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அலுவலர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

ஒம்/-இரா.கீர்த்தி பிரியதர்ஷினி,
மாவட்ட வருவாய் அலுவலர்,
நீலகிரி மாவட்டம்.

பெறுநர்
திருமதி.ஜே.எம்.கல்பனா,
இளநிலை வருவாய் ஆய்வாளர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
குன்னூர்.

நகல்: வட்டாட்சியர், குன்னூர்.
நகல்: "அ3" இருக்கைக்கு.

நகல்: முதன்மை செயலர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர்,
வருவாய் மற்றும் பேரிடர் தணிக்கும் துறை, சென்னை —— அவர்களுக்கு
தகவலுக்காகப் பணிந்து அனுப்பப்படுகிறது.

/உ.ந.உ.ப/

மாவட்ட வருவாய் அலுவலருக்காக,
நீலகிரி மாவட்டம். 2/4

இரா
10/01/2022